செய்தி வெளியீடு எண்.69 நாள்.02.02.2017

**திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள பள்ளி விடுதிகளில் பிற்படுத்தப்பட்டோர் நல அரசு பள்ளி விடுதிகளில் தங்கிப் பயிலும் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவ/மாணவியர் 2016-17 ம் ஆண்டு பொதுத் தேர்வில் 100/100 மதிப்பெண் பெற்றால் ஊக்கத் தொகை வழங்கப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

~~~~~

திருவள்ளூர் மாவட்டத்தில் இயங்கி வரும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல அரசு பள்ளி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ/மாணவியர்கள் கல்வி பயில்வதை ஊக்குவிக்கும் வகையில் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வுகளில் ஒவ்வொரு பாடப்பிரிவிலும் 100க்கு 100 மதிப்பெண் பெறும் மாணவ, மாணவியருக்கு தலா 1000 ரூபாய் வீதம் சிறப்பு ஊக்கத் தொகை வழங்கிட அரசு ஆணையிட்டுள்ளது .

எனவே, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோா நல அரசு பள்ளி விடுதிகளில் தங்கி 10 மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியர் அரசு பொதுத் தேர்வுகளில் 100க்கு 100 மதிப்பெண் பெறும் ஒவ்வொரு பாடப்பிரிவிற்கும் அரசின் ஊக்கத் தொகையான ரூ1000/-த்தை பெற்று பயனடையுமாறு என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்**
~~~~~